**தலைப்பு 428 – மஹாவலி வலயங்களை அண்டிய கால்வாய்கள் மற்றும் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மஹாவலி வலயங்களை அண்டிய கால்வாய்கள் மற்றும் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மஹாவலி வலயங்களை அண்டிய கால்வாய்கள் மற்றும் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான மஹாவலி வலயங்களை அண்டிய கால்வாய்கள் மற்றும் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.
- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 மீண்டுவரும் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் 01 இன் செலவு விடயம் 02 மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 02 இன் செலவு விடயம் 03 இன் வருட இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட வாக்குப் பதிவேட்டு மீதி ரூபா 8,681,984 தொகையாக காணப்பட்டதுடன், ஒன்றித்த பரீட்சை மீதி ரூபா 9,002,658 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 320,674 இற்கான வித்தியாசம் ஒன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | வாக்குப்படி பேரேட்டின் பெறுமதிகளை கூட்டும் போது ஏற்பட்டிருந்த தவறு ஒன்றின் காரணமாக இவ் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. | சரியாக பெறுமதிகளை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சினால் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமல், 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தல், ஒப்பந்தவேலை உடன்படிக்கைகளுக்கு அணுகுதல் மற்றும் அலுவலகத்தை நவீன மயப்படுத்தல் ஆகிய விடயங்கள் இலங்கை மஹாவலி அதிகார சபையின் மூலம் மேற்கொண்டிருந்தது. அதற்காக செலவிடப்பட்ட ரூபா 25,094,035 இற்கான தொகை இராஜாங்க அமைச்சில் இருந்து மீளளிப்பு செய்யும் அடிப்படையில் இலங்கை மஹாவலி அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த கொடுக்கல் வாங்கல்கள் இராஜாங்க | 2020 ஆண்டின் மஹாவலி வலயங்களை அண்டிய கால்வாய்கள் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு புதிதாக நிறுவப்பட்டதுடன், அமைச்சில் நிலையான சொத்துக்கள் ஏதும் காணப்படாமையால் அவசர கொள்வனவு இலங்கை மஹாவலி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021 ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் இத் தொகையை விண்ணப்பிக்கப்பட்டுள்ளதுடன் அரசினால் மூலதனச் செலவுகள் வரையறுக்கபட்டமையால் | வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடு வரையறை மிகைத்து செலவு மேற்கொள்ளல் கூடாததுடன் உரிய பொறுப்புக்களை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அமைச்சின் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகள் போதியளவு வழங்கப்பட்டிருக்கவில்லை. கொடுப்பனவு செய்யப்பட்டு இருக்காமையால் இவ் இருப்பு இலங்கை மஹாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமாக காணப்படுவதுடன் திறைசேரியில் இருந்து கிடைக்கும் ஏற்பாடுகளின் படி பணம் செலுத்தி அமைச்சின் புத்தகங்களில் உட்படுத்தப்படும். போதியளவு ஏற்பாடுகள் இன்மையால் பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவதற்கு முடியாது என அறிவிக்கின்றேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,250,000,000 தொகை எனினும் ஆண்டின் போது இலங்கை மின்சார சபைக்கு அனுப்பப்பட்ட இன்வொயிஸ்களின் பெறுமதி ரூபா 1,504,328,099 தொகை ஆகும். வருமானம் சேகரித்தல் தொடர்பாக சரியான முறையில் மேற்பார்வை அலுவல்கள் மேற்கொண்டிருந்தால் நி.பி.85(2)(ஆ)) பிரகாரம் திருத்திய மதிப்பீடொன்று தயாரித்து அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இராஜாங்க அமைச்சினால் 2021 ஆண்டிற்காக திருத்திய வருமான மதிப்பீடொன்று தயாரித்திருக்கவில்லை. | காலநிலை மாற்றங்களின் படி நிலவுகின்ற மழைவீழ்ச்சி நிலைமையின் மீது நீர் மட்டம் தீர்மானிக்கப்படுவதுடன் அதன் படி உற்பத்தி செய்யக் கூடிய நீர் மின்சக்தி எண்ணிக்கையும் வித்தியாசப்படும். 2021 ஆண்டின் ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மிகை மழை பெய்தமையால் உற்பத்தி செய்யப்பட்ட நீர் மின்சக்தியின் எண்ணிக்கை மதிப்பீட்டு எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தது. அதன் காரணமாக மதிப்பீட்டு வருமானத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறு மதிப்பீட்டு வருமானத்தில் ஏற்படுகின்ற தளம்பல்களை கவனத்தில் எடுத்து வருமான மதிப்பீட்டை திருத்தி அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 20.03.08.00 கொண்ட வருமான குறியீட்டு இலக்கத்துக்குரிய 2021 ஆண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,250,000,000 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 538,063,129 தொகையாக இருந்தது. அவற்றில் ரூபா 243,731,417 தொகை 2021 ஆண்டிக்குரியதாக காணப்பட்டதுடன் மீதித் தொகை ரூபா 294,331,712 முன்னைய ஆண்டிற்குரிய நிலுவைத் தொகையாகும். இதன் படி மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீட்டு வருமானத்தில் 19.5 சதவீதம் போன்ற குறைந்த சதவீதத்தை பெற்றிருந்தது. | ஆண்டிற்குரிய இலங்கை மின்சார சபையில் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகைக்காக இன்வொயிஸ் பத்திரங்கள் வழங்கப்பப்பட்ட போதிலும் அந்த பெற வேண்டிய தொகையில் ஒரு பகுதி மாத்திரம் இலங்கை மின்சார சபையினால் செலுத்தப்பட்டு மீதித் தொகை அடுத்த வருடம் செலுத்துதல் கடந்த காலப் பகுதி முழுவதும் நடைபெற்றிருந்தது. அதன்படி 2021 ஆண்டிற்குரிய வருமானத்தில் ரூபா 243,731,417 இற்கான தொகை ஒன்று 2021 ஆண்டிலும் ரூபா 4,255,148 தொகை 2022 ஆண்டிலும் செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை மின்சார சபையில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக இக் கொடுப்பனவுகள் தாமதம் அடைந்திருந்தது. | பெற வேண்டிய வருமானங்களை விரைவாக அறவீடு செய்யவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் 01 இன் கீழ் 02 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,900,000 இற்கான ஏற்பாடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 07 செலவு விடயங்களில் 28 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்பொன்று மற்றும் 02 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் இன் கீழ் 06 செலவு விடயங்களில் 31 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை, ஆண்டின் போது அபிவிருத்தி வேலைகள் ஏதும் மேற்கொள்ளப்படாமை, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்படாமை மற்றும் கொடுப்பனவுக்காக பில் பத்திரங்கள் காணப்படாமை இச் சேமிப்புகளுக்காக காரணமாக இருந்தது. | ஏற்பாடுகள் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் சரியாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2.1 மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் 01 இன் கீழ் ஒரு செலவு விடயத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 300,000 தொகை மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 02 இன் கீழ் ஒரு செலவு விடயத்துக்காக ரூபா 400,000 இற்கான ஏற்பாடுகள் முழுவதும் | ஆண்டின் போது அபிவிருத்தி வேலை ஏதும் மேற்கொள்ள தேவைப்படாமை, கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பயிற்சி வழங்கல்கள் மற்றும் கடமைகள் வரையறுக்கப்படல், கட்டுநிதிகள் | ஏற்பாடுகள் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிக்கப்பட்டிருந்ததுடன், நிகழ்ச்சித் திட்டம் 01 இன் கீழ் ஒரு செலவு விடயத்தில் 65 சதவீத சேமிப்பும் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் 02 இன் கீழ் 03 செலவு விடயங்களில் 26 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையான வீச்சில் மீதியொன்று காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | கிடைக்கப்படாமை மற்றும் பில் பத்திரங்கள் கிடைக்கப்படாமை மற்றும் தீர்ப்பதற்கு பில் பத்திரங்கள் காணப்படாமை சேமிப்பிற்கு காரணமாகியிருந்தது. | |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் (குறிப்பு iii) 06 நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களுக்கு உரிய பில் பத்திரக் கொடுப்பனவு தொடர்பாக ஏற்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 5,598,447 தொகை எனினும், அப் பெறுமதி ரூபா 48,247,702 தொகை என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதே போல் அதற்குரிய பொறுப்புக்களை விடுவித்தல் ரூபா 286,169 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்தது. | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் (குறிப்பு iii) 06 நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களுக்கு உரிய வெவ்வேறாக காட்டப்பட்டுள்ள பில் பத்திரங்களின் பெறுமதி சரியாக காணப்படுவதுடன், அவற்றின் கூட்டுத்தொகையை பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்டிருந்த தவறொன்றின் காரணமாக பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 48,533,871 தொகை எனவும் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 286,169 தொகை எனவும் மீதி ரூபா 48,247,702 தொகை எனவும் பதிவு செய்யப்பட்டிருந்தது. அப் பெறுமதிகள் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 5,598,447 எனவும் செலுத்திய பெறுமதி மீதியொன்று காணப்படவில்லை என சரி செய்யப்பட வேண்டுமென என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | சரியான எண்ணிக்கைகள் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் படி 2021 ஆண்டிற்கான மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 339,980,921 தொகை எனவும், பொறுப்புக்களை விடுவித்தல் ரூபா 256,864,175 தொகை எனவும் காட்டப்பட்டிருந்த போதிலும் கணிப்புக்களின் சரியான தன்மையை பரிசோதனை செய்த போது மொத்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 345,579,368 | 2021 ஆண்டிற்கான மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி தவறுதலாக கூட்டும் போது பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் மொத்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 345,579,368 தொகை எனவும் செலுத்தப்பட்ட பொறுப்புக்கள் ரூபா 264,702 எனவும் பொறுப்புக்கள் மீதி ரூபா 345,314,666 தொகை எனவும் சரி செய்யப்பட வேண்டும்.<br><br>நிதிக்கூற்றுக்களில் குறிப்பு(iii) இல் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தொகை எனவும், பொறுப்புக்களை விடுவித்தல் ரூபா 264,883 தொகை எனவும் மற்றும் பொறுப்புக்களின் மீதி ரூபா 345,314,485 தொகை எனவும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களில் (குறிப்பு iii) இன் கீழ் நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்கள் தொடர்பாக காட்டப்பட்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக தேவையான எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அப் பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கணக்காய்விற்கு இயலாமல் இருந்தது. | ஒவ்வொரு நீர்ப்பாசன அலுவலகங்களுக்கும் உரிய பொறுப்புக்களின் பெறுமதியை பொழிப்பாக்கி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன், பொறுப்புக்கள் பதிவேட்டில் இறுதியில் “428-2-3-8-2506 கீழ் காணப்படும் பொறுப்புக்களுக்காக பின்னிணைப்பு ஒன்று இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (குறிப்பு iii)” என குறிப்பொன்று போடப்பட்டு உள்ளதுடன் அதற்குரிய விரிவான பொறுப்புக்கள் பதிவேடு நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 ஆண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய மின்சாரம் மற்றும் நீர் பில்பத்திரங்களின் பெறுமதி ரூபா 582,892 தொகை கொடுப்பனவு செய்திருக்காததுடன், 2021 நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள பொறுப்புக்கள் கூற்றிலும் அது தொடர்பாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அமைச்சுக்குரிய நீர் மற்றும் மின்சார பில் பத்திரங்கள் இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு மீளளிப்புச் செய்யப்படுகின்றது. 2021 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய பில் பத்திரங்கள் கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கிடைத்திருக்காமையால் கணக்குகளில் காட்டப்படவில்லை. | தேவையான தகவல்கள் பெற்றுக் கொண்டு நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

## 2.4 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இனால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) பிரகாரம் துணைக் கட்டுநிதிகள் வழங்கப்பட்ட பின்னர் குறிப்பிட்ட கருமம் பூர்த்தி அடைந்து 10 நாட்களுக்குள் அந்த துணைக் கட்டுநிதியை தீர்க்க வேண்டியிருந்த போதிலும், 26 சந்தர்ப்பங்களில் 18 நாட்கள் | சிறிய அளவிலான வாகனத் திருத்த வேலைச் செலவுகள், எரிபொருள் முற்பணங்கள் மற்றும் உபசரணை செலவுகளுக்காக வருட ஆரம்பத்தில் முற்பணம் பெற்றுக் கொண்டு மாதாந்தம் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏனைய எரிபொருள் முற்பணங்கள் வாகனங்களை இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரினால் | கருமம் முடிவடைந்தவுடனே முற்பணங்கள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 298 நாட்கள் வரையான காலவீச்சில் கட்டுநிதி தீர்த்தல் தாமதம் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | வெளிக்களத்திற்கு செல்லும் போது மேலதிக எரிபொருள் முற்பணம் என வழங்கப்பட்டிருந்ததுடன், தீர்த்தல் குறிப்பிட்ட உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் இம் முற்பணத் தொகை குறிப்பிட்ட செலவை மேற்கொண்ட பின்னர் விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்கு குறித்துக் கொண்டேன். | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 371(2)(ஈ) பிரகாரம் துணைக் கட்டுநிதிகள் வழங்குதல் நிறைவேற்று உத்தியோகத்தருக்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 08 சந்தர்ப்பங்களில் நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர்களுக்கு துணைக் கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தது. | இந்த அமைச்சின் கீழ் போதியளவு நிறைவேற்று உத்தியோகத்தர்கள் காணப்படாமையால் முற்பணம் வழங்குவதற்கு அமைச்சுத் தலைவரின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டு பதவியணியில் உள்ள குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அம் முற்பணங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**2.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றிகரத் தன்மையை இடையிடையே மீளாய்வு செய்து அதன்படி முறைமையை ஆக்கபூர்வமாக மேற்கொண்டு வருவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வுகள் | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பிரிவுகள் இடையே செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று தற்போது நிறுவப்பட்டிருக்காமையால், இதனை முறைப் பிரகாரம் செயற்படுத்துவதற்கு முடியாமல் உள்ளது. எதிர்காலத்தில் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு குறித்திக் கொண்டேன். | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான செய்முறை ஒன்று காணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 4.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி அத் தேவைப்பாடு நிறைவேற்றி இருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்றிற்கான தேவைப்பாடு சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக அடிக்கடி பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2022 ஆண்டிற்காக நீர்ப்பாசன அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் உதவி மற்றும் வழிகாட்டலை வழங்குமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 104(1)(அ), 104(3) மற்றும் 104(4) | 2021 ஏப்ரல் 25 திகதி ஏற்பட்டிருந்த வாகன விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டிய அலுவல்கள் உரிய கால சட்டகத்தினுள் மேற் கொண்டிருக்கவில்லை. | வாகனத்திற்கு விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டு அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களின் வருகை வரையறுக்கப்பட்டு இருந்தமையால் விபத்துடன் தொடர்புடைய நி.பி. 104(1)(அ) இன் கீழ் விசாரணை குழு நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டது எனவும், அதன் படி நி.பி. 104(3) மற்றும் (4) பிரகாரம் குறிப்பிட்ட அறிக்கைகளும் உரிய கால சட்டகத்தினுள் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது எனவும் மற்றும் எதிர்காலத்தில் உரிய திருத்தங்களுடன் செயற்படுவதற்கு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | | |
| (ii) | நிதிப் பிரமாணம் 109(1)(அ) | சேதப் பதிவேட்டில் இருந்து நீக்கும் அனைத்து கட்டளைகளின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், விபத்துக்குரிய காப்புறுதி உள்ளடக்கத்தினால் மேற்கொள்ள முடியாதிருந்த ரூபா 34,429 இற்கான நீக்கல் கட்டளையின் பிரதியொன்று 2022 ஏப்ரல் 25 திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 109(1)(ஆ) இன் பிரகாரம் நட்டத்தை ஏடுகளில் இருந்து அகற்றுவதற்குரிய ஆவணங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களத்திற்கு 2022.03.29 திகதி அனுப்பப்பட்டுள்ளது. | - | மேற்படி - |
| (iii) | நிதிப் பிரமாணம் 128(2)(இ) | வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கை குறிப்பிட்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர் தொடர்ந்துவரும் மாதத்தினுள் அரச நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் படி செயற்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வருமானம் தொடர்பான அரையாண்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் உரிய முறையில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - | மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iv) நிதிப் பிரமாணம் 135 | வருமானக் கணக்குகள் தொடர்பாக வருமானத்தை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், அனுப்புதல் தொடர்பான நிதி அதிகாரக் கையளிப்பு மேற் கொண்டிருக்கவில்லை | இந்த அமைச்சுச் செயலாளர் 2021.04.27 திகதி முதல் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். நிதி அதிகாரக் கையளிப்பு 2021 இல் மேற் கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதுடன் அடுத்த ஆண்டிற்கான அதிகாரக் கையளிப்பு மேற் கொள்வதன் மூலம் சரி செய்வேன் என அறிவிக்கின்றேன். | - மேற்படி - |
| (v) நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற் கொண்டிருக்கவில்லை. | வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கூடிய விரைவில் பண்டக் கணிப்பீட்டு அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (vi) நிதிப் பிரமாணம் 1642 | வாகனங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தரினால் அல்லது அந்த வாகனங்களின் சாரதிகளினால் மேற் கொள்ளப்படும் அனைத்து திடீர் விபத்துக்களை அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வாகன விபத்து தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்திருக்கவில்லை. | இது தொடர்பாக சாரதிகளுக்க எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறான அலுவல்கள் நடைபெறாமல் இருப்பதற்கு அனைத்து சாரதிகளுக்கும் மீண்டும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டேன். | - மேற்படி - |
| (ஆ) 2015 ஜூன் 20 திகதிய 01/2015 இலக்கங் கொண்ட அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை | | | - |
| (i) பந்தி 4 பிரிவு (அ) | அறவிடப்பட வேண்டிய வருமானத்தின் எண்ணிக்கை, சேகரிக்கப்பட்ட வருமானத்தின் | அமைச்சின் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் 2021.04.07 திகதியே நியமனம் செய்யப்பட்டு | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை மற்றும் நிலுவை வருமானம் ஏதும் காணப்படின் அந்த எண்ணிக்கையையும் தெளிவாக காட்டக் கூடிய விதத்தில் முறையான அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும், அமைச்சினால் வருமான குறியீட்டு இலக்கங்களுக்குரிய அறிக்கைகள் பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இருந்தது. இது தொடர்பாக உரிய முறையில் செயற்படுவதற்கு முடியாமல் போயுள்ளதை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் சரியான அறிக்கைகள் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (ii) பந்தி 4 பிரிவு (ஆ) | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வருமானம் சேகரமாவதை தவிர்ப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி செயற்பட்டு இருக்கவில்லை. | இத் தாமதம் ஏற்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்வதுடன் அவை மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்காக பொறுப்பாக இருப்பேன். | - மேற்படி - |
| (iii) பந்தி 7 | அனைத்து வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும் தமது அரையாண்டு வருமான அறிக்கை குறிப்பிட்ட காலவரையறை முடிவடைந்து 15 நாட்களுக்குள் அரச நிதிக் கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும், இராஜாங்க அமைச்சு 2021 ஆண்டிற்கான அரையாண்டு வருமான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருக்கவில்லை. | | |
| (இ) | 2022 ஜனவரி 12 திகதிய SA/MAA/02/01/01 இலக்கங் கொண்ட அரச கணக்கு பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடல் அடிப்படை திருத்தப்பட்டிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | அரச கணக்கு பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் வழிகாட்டலின் படி குறிப்பிட்ட படிவம் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒப்பீட்டு தன்மையுடனான தகவல்கள் 2020 மீண்டும் சீராக்கல் செய்யப்பட்ட தகவல்கள் நிரழில் காட்டப்பட்டுள்ளது. | ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட 21 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அடுத்த ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் நடைமுறை ஆண்டின் திசெம்பர் 15 திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் இராஜாங்க அமைச்சின் 2021 செயல் நடவடிக்கைத் திட்டம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக 2021 நவம்பர் 15 திகதியே சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | கொவிட் தொற்றுநோய் முறைமை மீது மஹாவலி இராஜாங்க அமைச்சுக்குரிய 2021 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்திற்காக 2021.03.15 திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதேபோல், 2021 ஆண்டில் தொடர்ந்தும் காணப்பட்ட தொற்றுநோய் நிலைமை மற்றும் நிதி நெருக்கடி காரணத்தினால் இவ் அமைச்சின் செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தப்பட்டதுடன், அந்த திருத்தத்திற்கு ஆளாக்கப்பட்டதுடன், செயல்நடவடிக்கைத் திட்டம் 2021.11.15 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது நிதிச் சுற்றிக்கை இலக்கம் 02/2020 தொடர்பாக அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல் இலக்கம் 06 இன் 8 இன் படி மேலும் அறிவிக்கப்பட வேண்டிய நிதியல்லாத | 2020.12.22 திகதியளவில் அமைச்சு நிறுவப்பட்டிருந்த காரணத்தினால் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் காணப்பட்ட வாகனங்கள் நீர்ப்பாசன | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| சொத்துக்கள் காணப்படின் அவற்றை உரிய முறையில் இனங்கண்டு கிரயத்திற்கு அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 18 திகதி மற்றும் 2020 திசெம்பர் 22 திகதி நீர்ப்பாசன அமைச்சிலிருந்து கிடைத்திருந்த 05 வாகனங்களை கணக்கீடு செய்வதற்காக 2022 ஏப்ரல் வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சின் பொறுப்பில் எடுக்கப்பட்டதுடன், இந்த அமைச்சுக்கு சொந்தமான 09 வாகனங்கள் மீண்டும் மஹாவலி இராஜாங்க அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்டிருந்த வாகனங்கள் இந்த அமைச்சுக்கு பதிவு செய்தல் அதிகாரத்துடனானவையாக காணப்பட்டதால் மீண்டும் உரித்தாக்கல் மேற்கொள்ளப்படவில்லை என கருணையுடன் அறிவிக்கின்றேன். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சு ஒன்றின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அந்த அமைச்சுக்கான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி வரை இராஜாங்க அமைச்சுக்காக உள்ளளக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இவ் அமைச்சுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுள் இலங்கை கணக்காளர் சேவையின் 111/11 பதவியொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அப் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. இது தொடர்பாக பல தடவைகள் பொது நிர்வாக மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது. 2021.10.14 திகதியும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யும் படி அமைச்சு செயலாளரின் கையொப்பத்துடன் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களுக்கும் உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தனக்கு உதவிசெய்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் இராஜாங்க அமைச்சுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சுக்காக இதுவரை உள்ளகக் கணக்காய்வாளர் காணப்படாமையால், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உதவிக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டதுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று நியமனம் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தற்போது காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட வேண்டிய முகாமைத்துவ குழுக் கூட்டங்களுக்காக நீர்ப்பாசன அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் உதவி வழங்குமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் 05 பதவிகள் இரண்டாம் மட்டத்தில் 11 பதவிகள் ஆரம்ப மட்டத்தில் 06 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | முகாமைத்து சேவைத் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி சேவையின் தேவைப்பாடுகளை கவனத்தில் எடுத்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |